தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
TAMILNADU TEACHERS EDUCATION UNIVERSITY
(Established under Tamil Nadu Act 33 of 2008)
Gangaiammam Koil Street, Karapakkam, Chennai - 600 097.
Website: www.tnteu.ac.in; Email:registrar@tnteu.ac.in

No.TNTEU/R/Admin/2026/02034 **Date: 23.11.2026**

WEB POST

சுற்றறிக்கை

பொருள்: தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் - இணைவு பெற்ற கல்வியியல் கல்லூரிகள் – 77-வது இந்திய அரசமைப்பு தினம் 26.11.2026 அன்று அனுசரிக்கப்படுதல் - இந்திய அரசமைப்புச் சட்டத்தின் முகவுரையினை வாசிக்க ஏற்பாடு செய்தல் - தொடர்பாக.

பார்வை: சட்ட(அநமு -1)த்துறை கடித எண்:11903/அநமு-1/2026-1, நாள்: 19.11.2026.

மேற்காண் பார்வையில், சட்டத்துறை, அரசு செயலாளர் அவர்கள் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"2026-ஆம் ஆண்டு, நவம்பர் 26-ஆம் நாள் 77வது இந்திய அரசமைப்பு தினத்தை முன்னிட்டு, தலைமைச் செயலகத்திலுள்ள அனைத்துத் துறைகளிலும், மாண்பமை உயர்நீதின்றம் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் உள்ளிட்ட அனைத்து துறைத் தலைவர் அலுவலகங்களிலும், அனைத்து சார்நிலை அரசு அலுவலகங்கள், மாநில அரசின் அனைத்து அலுவலகங்கள், தன்னாட்சி அதிகார அமைப்புகள் / நிறுவனங்கள், தன்னாட்சி அரசு நிறுவனங்கள், அனைத்துப்பள்ளிகள் மற்றும் கல்லூரிகளிலும் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் முகவுரையை 26.11.2026 அன்று காலை 11.00 மணிக்கு அந்தந்த அலுவலகங்கள் / இடங்களிலிருந்து வாசிக்க ஏற்பாடு செய்யவும், மேலும், அனைத்துப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் அரசமைப்பு நெறிமுறைகள் பற்றிய பேச்சுப் போட்டிகள் / கருத்தரங்குகள் / வினாடி வினா நிகழ்ச்சிகளை நடத்த ஏற்பாடு செய்யுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது."

எனவே, தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தின் கீழ் இணைவு பெற்றுள்ள அனைத்து கல்வியியல் கல்லூரியின் முதல்வர்கள் தங்கள் கல்லூரியில் 26.11.2026 அன்று காலை 11.00 மணிக்கு இந்திய அரசமைப்புச் சட்டத்தின் முகவுரையை வாசிக்க ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது மேலும், அனைத்து கல்வியியல் கல்லூரிகளிலும் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படைப்கோட்பாடுகள் மற்றும் இந்திய அரசமைப்பு நெறிமுறைகள் பற்றிய பேச்சுப் போட்டிகள் / கருத்தரங்குகள் / வினாடி வினா நிகழ்ச்சிகளை நடத்த ஏற்பாடு செய்யுமாறும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

23/11/26

பதிவாளர் (பொ)

இணைப்பு: மேலே குறிப்பிட்டுள்ளவாறு.

பெறுநர்:

முதல்வர்கள் / செயலர்கள்,
இணைவு பெற்ற அனைத்து கல்வியியல் கல்லூரிகள்,
தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்.

தன்னாட்சி அமைப்புகள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும்
பொதுத்துறை நிறுவனங்கள்.(இணைப்புடன்).

ஐயா/அம்மையீர்,

பொருள்: சட்டத்துறை – 77–வது இந்திய அரசமைப்பு தினம் 26.11.2026 அன்று அனுசரிக்கப்படுதல் – இந்திய அரசமைப்புச் சட்டத்தின் முகவுரையினை வாசிக்க ஏற்பாடு செய்தல் – தொடர்பாக.

2026– ஆம் ஆண்டு, நவம்பர் 26–ஆம் நாள் 77வது இந்திய அரசமைப்பு தினத்தை முன்னிட்டு, தலைமைச் செயலகத்திலுள்ள அனைத்துத் துறைகளிலும், மாண்பமை உயர்நீதிமன்றம் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் உள்ளிட்ட அனைத்து துறைத் தலைவர் அலுவலகங்களிலும், அனைத்து சார்நிலை அரசு அலுவலகங்கள், மாநில அரசின் அனைத்து அலுவலகங்கள், தன்னாட்சி அதிகார அமைப்புகள் / நிறுவனங்கள், தன்னாட்சி அரசு நிறுவனங்கள், அனைத்துப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளிலும் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் முகவுரையை 26.11.2026 அன்று காலை 11.00 மணிக்கு அந்தந்த அலுவலகங்கள்/இடங்களிலிருந்து வாசிக்க ஏற்பாடு செய்யவும், மேலும், அனைத்துப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் அரசமைப்பு நெறிமுறைகள் பற்றிய பேச்சுப் போட்டிகள் / கருத்தரங்குகள் / வினாடி வினா நிகழ்ச்சிகளை நடத்த ஏற்பாடு செய்யுமாறும் தங்களைக் கேட்டுக்கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன். இந்திய அரசமைப்புச் சட்டத்தின் முகவுரையின் நகல் ஒன்றினையும் இக்கடிதத்துடன் இணைத்தனுப்பப் பணிக்கப்பட்டுள்ளேன்.

தங்கள் உண்மையுள்ள,

த.மா. சேகர்
26/11/26
அரசு செயலாளருக்காக.

இந்திய அரசமைப்பு

முகப்புரை

இந்திய மக்களாகிய நாம், இந்திய நாட்டினை இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்,

அதன் குடிமக்கள் அனைவரும்

சமுதாய, பொருளியல், அரசியல் நீதி,

எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,

சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை,

சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் சமன்மை

ஆகியவற்றை எய்திடச் செய்யவும்,

அவர்கள் அனைவரிடையேயும்

தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,

ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்

உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்

உள்ளார்ந்த உறுதியுடையராய்,

நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.